# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு2007 | முஹர்ரம்18 | மார்கழி 25 (9-1-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 75


# இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐ. நா. சபையில் இடி முழக்கம்! ஈழத்திலோ தமிழ்பேசும் மக்களின் தாயகம் திட்டமிட்டு ஆக்கிரமிப்பு!

### சிங்கள ஏகாதிபத்தியத்தின் பகல் வேஷம் அம்பலம்!

சர்வதேச சட்டப்படி இஸ்ரேல் நாட்டுக்கு சொந்தமாக இல்லாத பாலஸ்தீன பிரதேசங்களில் இஸ்ரேலிய அரசு திட்டமிட்டு யூதர்களை நிரந்தரமாகக் குடியேற்றி அப்பிரதேசங்களை ஆக்கிரமித்து வரும்போது மத்திய கிழக்குப் பிரச்சினையில் சமாதானம் எப்படி ஏற்படமுடியும்? என்று ஐ. நா. பொதுச்சபையில் முழங்கியிருக்கிறார் இலங்கைத் தூதுவர் திரு. நெவில் கனகரத்தின அவர்கள்—

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை அவர் கண்டித்துள்ளதை நாம் வரவேற்கும் அதே வேளையில்—சர்வதேச சட்டப்படி தமிழ் தேசிய இனத்தின் தாயகமாக விளங்கும் தமிழ் ஈழப் பிரதேசங்களில் சிங்களவர்களை திட்டமிட்டு நிரந்தரமாகக் குடியேற்றி தமிழ் பிரதேசங்களை அபகரித்துவரும் இலங்கை சிங்கள அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நீடிக்கும்போது இலங்கையில் சமாதானம் எவ்வாறு ஏற்பட முடியும் என்று ஐ. நா.வின் இலங்கைப் பிரதிநிதி நெவில் கனகரத்தின அவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திருப்பிக்கேட்கிறார்கள்.

உள்நாட்டில் தமிழ்தேசிய இனத்துக்கு எதிராக சிங்கள அரசு நடத்திவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் — அதே சமயம் உலக அரங்கில் சமாதானத் தூதுவனாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் அது ஆடிவரும் கபடநாடகமும், போடும் வெளிவேஷமும் கலந்து வருவதை அரசியல் அவதானிகள் உன்னிப்பாக கவனித்துவருகிறார்கள்!

ஐ. நா. பொதுச்சபையில் இலங்கையின் பிரதிநிதி திரு. நெவில் கனகரத்தின சென்ற கிழமை பாலஸ்தீனுக்கு எதிராக இஸ்ரேல் செய்துவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசியிருக்கிறார். அவரது உரையை பாராட்டுக் குறிப்புக்களுடன் 3-1-77 டெயிலி நியூஸ் முன்பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

'இஸ்ரேல், பாலஸ்தீனப் பிரச்சினையில் 'சமாதானத் தீர்வு'காண விரும்புவதாகக் கூறிக்கொள்கிறது. ஆனால் சமாதானம் என்று அது

—5-ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தியாகிகள் நினைவு தின நிகழ்ச்சிகள்!

1974 சனவரி 10ம் திகதி —உலகத்தமிழ் மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியின்போது— சிங்கள அரசாங்கத்தின் பொலிஸ்படை நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலின் விளைவாக உயிர்நீத்த ஒன்பது தமிழ்த்தியாகிகளின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 10-1-77ல் யாழ்ப்பாணத்தில் அனுட்டிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தமிழர் விடுதலைக் கூட்டணியும், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையும் கவனித்துவருகின்றன.

10-1-77 திங்கட்கிழமை காலை தமிழ்த் தியாகிகள் உயிர்நீத்த வீரசிங்கம் மண்டபத்துக்கு எதிரே அவர்களது ஆத்மசாந்திக்காக சர்வமத பிரார்த்தனைகளும், பூசைகளும் நடைபெறும். தியாகிகளின் நினைவாக கூட்டணித் தலைவர்கள், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை உறுப்பினர்கள், தமிழ் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளை பிரமுகர்கள், ஆகி

—5-ம் பக்கம் பார்க்க

## தியாகிகள் தினத்தில் அஞ்சலட்டை இயக்கம்!

தமிழ்த் தியாகிகள் தினமான சனவரி 10ம் திகதி தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 18 தொழிற்சங்கங்களும் ஒரே நாளில் பல ஆயிரக் கணக்கான அஞ்சலட்டைகளை பிரதமருக்கு அனுப்பி வைக்கும் இயக்கமொன்றை நடத்தவிருக்கின்றன. தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியினர் பிரதமருக்கு அனுப்பி வைக்கவிருக்கும் அஞ்சலட்டையில் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும்:-

—5-ம் பக்கம் பார்க்க

# அவசரகால விதிகளையும் மீறி வேலைநிறுத்தம் நீடிக்கிறது!

### தொழிற்சங்கத் தலைவர்கள் கைதாகலாம்!

1976 டிசெம்பர் 23ம் திகதி ஆரம்பமான ரயில்வேத்தொழிலாளர் வேலைநிறுத்தம் அவசரகாலச் சட்டத்தையும் மீறி இச் செய்தி அச்சுக்குப்போகும்நேரத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதே சமயம் 12 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பான அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் 7-1-77ல் புதிதாகவேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளது. அத்தியாவசிய சேவைப் பிரகடனத்தையும் மீறி வேலை நிறுத்தம் நீடிப்பதைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை பற்றி அரசியல் வட்டாரங்களில் பல்வித ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

ரூபா ஐநூறு சம்பள முற்பணம் கோரி 23-12-76ல் தொடங்கப்பட்ட புகையிரததொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடித்துவருகிறது. வேலை நிறுத்தங்களை முறியடிப்பதற்காக அரசாங்கம், சனவரி 5ம் திகதி இரவு அவசர காலச்சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவையைப் பிரகடனப்படுத்தியது. இதன்படி அத்தியாவசியசேவை பிரகடனத்தை மீறிவேலை நிறுத்தம் செய்பவர்களினதும், வேலைநிறுத்தத்தை தூண்டிவிடுவோரினதும் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் வேலையிலிருந்து நீக்கவும், சிறைத்தண்டனை விதிக்கவும் அரசாங்கம் அதிகாரம்பெற்றுள்ளது.


அத்தியாவசிய சேவைப் பிரகடனத்தின் பின்னரும் புகையிரத ஊழியர்கள் தமது வேலை நிறுத்தத்தை தொடர்ந்து வருகிறார்கள். வேலைநிறுத்தம் செய்துவரும்

—4-ம் பக்கம் பார்க்க





பாவியுங்கள்
பளிச்சிடும் வெண்மைக்கு
**ரோயல் நீலம்**
தயாரிப்பாளர்கள்:
சிவா இன்டஸ்ரீஸ்
112 1/3, 4ம் குறுக்குத்தெரு.
கொழும்பு-11.
விநியோகஸ்தர்கள்:
சேகர் அன் பிறதர்ஸ்,
ஆதம்மலி கட்டிடம்,
20, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 35049


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமாரபஞ்சாட்சரம்
உடப்பு

கே: டாக்டர். இரா. சனார்த்தனம் அவர்களின் 'இலங்கை மீண்டும் எரிகிறது' என்ற நாடகத்தை ஒரு புத்தகவடிவில் ஈழத்தில் வெளியிடுவீர்களா?

ப: சுதந்திரன் வெளியீடாக அதை வெளியிடும் திட்டம் உண்டு!

ஃ

க. குணநாதன்
திருமலை வீதி
வாகரை

கே: திரு. தேவநாயகம் கூறுகிறார் கிழக்குமாகாணத்தில் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவு இல்லை என்று; அப்படியானால் அவர் கிழக்கு மாகாணத்தில் பொதுத் தேர்தலில்போட்டி இடுவாரா?

ப: ஆமாம் போட்டியிட்டு நிச்சயம் மண் கவ்வுவார்!

ஃ

மகேன்,
அளவெட்டி

கே: தமிழர் விடுதலைக்கூட்டணியின் கூட்டுத்தலைவரான திரு. தொண்டமான் அவர்களின் இன்றைய நிலையென்ன?

ப: இன்றைக்கும் அவர் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவர் தான்; ஆனால் தனிநாட்டு தீர்மானத்திலிருந்து அவருக்கும், அவரது ஸ்தாபனத்துக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது!

ஃ

இராசலிங்கம்,
மட்டிக்களப்பு

கே: மறைந்த முன்னாள் அமைச்சர் நல்லையா அவர்களைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: அவர் ஆரம்ப நாட்களில் யூ. என். பி.யை நம்பினார்; பின்னர் அதில் நம்பிக்கை இழந்து தமிழ் காங்கிரசைத் தழுவினார்; தனது வாழ்நாளின் இறுதிக் காலத்தில், தமிழர் விடுதலைக்கூட்டணியின்கீழ் தமிழர்கள் ஒன்றுபட்டு, தனிநாடுகாணப் போராடுவதொன்றே விமோசனத்துக்கு வழியென்று தனது நெருங்கிய நண்பர்களிடம்கூறிவந்தார்; தந்தை செல்வாவை மிகவும் மதித்த ஒருவர். அவரை வைத்துக்கொண்டு, மட்டக்களப்பு யாழ்ப்பாணத் துவேஷத்தை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்த சில அரசியல் வாதிகள் முனைந்துள்ளனர்; அது ஒரு போதுமே பலிக்காது!

ஃ

கோ. கி. து. கோவிந்தராசன்
ருகலை

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி, வவுனியா, மன்னார் ஆகிய இரண்டு தொகுதிகளையும் இ. தொ. கா.வுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்று இ. தொ. கா. துணைப் பொதுச்செயலாளர் திரு. டி. வி. சென்னன் என்பவர் பேசியிருக்கிறாரே......!

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியின் தனிநாடு கொள்கையை ஏற்காதவர்களை கூட்டணி எப்படி தனது வேட்பாளர்களாக நியமிக்க முடியும்? தமிழ்ஈழக் கொள்கையை உள்ளத்தூய்மையோடு ஏற்றுக்கொள்பவர்களுக்கு மட்டுமே கூட்டணி 'டிக்கட்' கிடைக்கும்!

ஃ

பொ. இராமச்சந்திரன்
வாகரை

கே: தமிழ் உரிமை கொடுக்க சிங்களவர் ஏன் மறுக்கிறார்கள்?

ப: உரிமையை சிங்களவர் கொடுத்தாலும், அதை வாங்கும் நிலையில் தமிழர்கள் இன்று இல்லை; தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டை மீட்கவே இன்று போராடுகிறார்கள்!

ஃ

இராமநாதன்,
கொழும்பு-13

கே: பருத்தித்துறை நகர சபைத்தலைவர் திரு. நடராசா மீண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சேருவார் போலத்தெரிகிறதே!

ப: ஆமாம், பருத்தித்துறையில், மூன்று அமைச்சர்கள் முன்னிலையில் கிடைத்த 'அடி' அதற்குள் அவருக்கு மறந்துபோய் விட்டது! நக்கிற... செக்கென்ன சிவலிங்கமென்ன? ஒருமுறை விபசாரியான பெண் தொடர்ந்தும் விபசாரம்செய்து கொண்டேயிருப்பாள்!

முருகேசு
யாழ்ப்பாணம்

கே: திரு. வி. பொன்னம்பலம் கம்யூனிஸ்ட்கட்சியிலிருந்து விலகிவிட்டாராமே, அவரது அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: திரு. வி. பொன்னம்பலம் அவர்கள், இத்தனை காலமும் விழலுக்கு நீர் பாய்ச்சிக் களைத்துவிட்டார்! தனது எஞ்சிய காலத்தை யாவது, தமிழுக்கும், தமிழினத்தின் உயர்வுக்கும், தமிழ் ஈழத்தின் விடுதலைக்கும் அவர் அர்ப்பணிக்கவேண்டும்! அவரது திறமை, தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் பயன்படவேண்டும்; தமிழ் ஈழம் அமைந்த பின்னர், தமிழ்ஈழப் பொதுவுடமைக் கட்சியின் தலைவராக அவர் விளங்கலாம்: இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து தமிழ்ஈழத்தின் தேசிய விடுதலைக்கு போராட அவர் முன்வர வேண்டும். அப்படி வந்தால் அவருக்கு நல்ல அரசியல் எதிர்காலமுண்டு!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

---

## தாய்மொழிக் கல்வியும் தமிழர் நிலையும் (4)

—ப. சந்திரசேகரம் எம். ஏ.—

# போதனு மொழி உரிமை மறுக்கப்படும் அநீதி

**இன்றைய கல்வித்திட்டம், கலைத்திட்டம் ஆகியவற்றில் மொழிகள் பெறுகின்ற இடம் முக்கியம் ஆகின்றது. இத்திட்டம், அன்னை மொழியே போதனு மொழியாய் இருத்தல் வேண்டும் எனும் உரிமையை மறுக்கிறது. நமது கல்விமுறைக்கு புத்துயிர் அளிப்பது தாய்மொழிப் போதனை என்று கண்டோம். ஆனால் நமது கல்வி மரபில் இக்கல்வி அடிப்படை உரிமை காலத்திற்குக்காலம் மாற்றம் பெறுகின்றது.**

தாய்மொழி அல்லது அன்னைமொழி எனும் சொல் முதல் மொழி எனும் சொல்லாக மாறி கல்விமொழி எனும் சொல்லாகவும் விளக்கப்படுகின்றது. அன்னை மொழி அல்லது தாய்மொழி என்ற சொல்லும், முதல் மொழி என்ற சொல்லும் கல்விமொழி என்ற சொல்லும் ஒரே கருத்தினைத் தரமாட்டா. அன்னைமொழி அல்லது தாய்மொழி என்ற சொல் சிறந்த கருத்தைத் தரும்போது முதல்மொழி, கல்விமொழி, என்ற சொற்கள் உபயோகிப்பதில் அர்த்தமில்லை.

தாய்மொழி இல்லாத மக்களுக்கே முதல்மொழி தேவைப்படுகின்றது. தாய்மொழி போதனுமொழியாக இயங்கும் சக்தி உள்ளபோது கல்விமொழி என்று ஒரு புறம்பான மொழி வேண்டியதில்லை. நமது இன்றைய கலைத்திட்டத்தில் முதல் மொழி அல்லது கல்விமொழி போதனுமொழி என்றும் முதல்மொழி அல்லது கல்வி மொழி என்பது சிங்கள மொழி அல்லது தமிழ்மொழி ஆகிய இரு மொழிகளுள் ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளது. முதல்மொழி அல்லது கல்விமொழிக்கு தாய்மொழி என்ற வியாக்கியானம் கொடுத்து அதன் பின்னர் பெற்றோர் விருப்பப்படி சிங்களம் அல்லது தமிழ் எந்த மாணவனுக்கும் போதனு மொழியாய் இருக்கலாம் என்பது; அரசாங்கமே ஆக்கிய சட்டத்துக்கு முரணுகும்.

அன்னை அல்லது தாய் மொழிக் கொள்கைக்கும் முரணுகும். பாராளுமன்றத்தில் அல்லது தேசியப் பேரவையில் சமர்ப்பிக்கப்படாமலே 1972ம் ஆண்டு தொடக்கமே கலைத்திட்டத்தில் இது இடம்பெற்றுவிட்டது. பின்னர் கல்வி அமைச்சின் வரவு-செலவுத்திட்டம் விவாதிக்கப்பட்டபோது இப்பிரச்சினை எழுந்தது. தமிழர் விடுதலைக் கூட்டுமுன்னணி அங்கத்தவர்கள் மட்டுமே தமிழ்மொழியே தமிழ் மாணவர்களுக்கு போதனு மொழியாக இருக்கவேண்டும் என்பது சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அழுந்தம் திருத்தமாகக் கூறினார்கள்.

மாணவர்களின் போதனு மொழி தாய்மொழி என்று சோவியத் குடியரசு அரசியல் திட்டத்தில் இருப்பது போலவும் சுவிற்சலாந்து நாட்டில் இருப்பதுபோலவும் நமது நாட்டு அரசியல் திட்டத்திலும் இது இடம் பெறவேண்டும். ஆனால் இக் கருத்தினை விளங்காது. நமது பாரம்பரியத்தையே அறியாது நம்மில் பலர் நமது குழந்தைகளை சிங்களமொழி மூலம் கற்பிக்கின்றோம் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு, ஓர் அளவு மலையகம் போன்ற பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கையாலும் தமிழ் மொழிக் கல்லூரிகள் இல்லாத காரணத்திலும் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழிமூலம் கற்கின்றார்கள்.

முஸ்லிம் சகோதரர்கள் தங்கள்மொழி எது என்பதை திட்டவட்டமாக முடிவுசெய்தல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மாணவர்கள் தமிழ் மொழிமூலமே கற்கிறார்கள். ஆனால் மற்றைய மாகாணங்களில் உள்ள அதிகமான மாணவர்கள் சிங்களமொழி மூலமே கற்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கற்காமலும் இல்லை. யாழ்ப்பாணப் பிரதேசத்தை எடுப்போமானால் பௌத்த சிங்கள பள்ளிக்கூடங்கள் என்று கொள்ளப்படுகின்ற பள்ளிக்கூடங்களை விட யாழ்ப்பாண சிங்கள மகா வித்தியாலயத்திலும் ஏறக்குறைய 200தமிழ் மாணவர்கள் சிங்கள மொழிமூலம் கற்கின்றனர்.

அன்னை மொழிப்போதனை உரிமையை மறுத்த ஏகாதிபத்தியங்களோ ஒழிந்துவிட்டன. இதற்கு வரலாறு சான்று பகரும். நாம் நமது அன்னைமொழிப் போதனை உரிமையை பேணுவிட்டால் பாதுகாக்காவிட்டால் நாமே அழிவோம்.

(தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை நடாத்திய கருத்தரங்கில் ஆற்றிய உரையின் தொகுப்பு)

---

## தமிழர் கோரிக்கைகள் நிறைவு செய்யப்படாவிடின் ஒருமைப்பாடு சாத்தியமில்லை!!

### சிலாப ஆயர் நிகழ்த்திய அறிவுரை

அண்மையில் கண்டியிலுள்ள தேசிய குருத்துவக் கல்லூரியின் 22வது கல்வி யாண்டுத் தொடக்கவிழாவில் உரைநிகழ்த்துகையில் சிலாப ஆயர் பேரருள் திரு. மார்க்கஸ் பெர்னுண்டோ ஆண்டகை பின்வருமாறு கூறினார்:—

"வடக்குக்கும் தெற்குக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் கத்தோலிக்கராகிய நமக்குத் தனிச் சிறப்பானவோர் பொறுப்புண்டு. தமிழ், சிங்கள சமுதாயங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ள கத்தோலிக்கர் உள்ளனர். எனவே, இணைக்கும் பலத்தை அமைப்பதற்கு நாம் சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளிலும் மனிதரிலும் நாம் கொண்டுள்ள நம்பிக்கை இன்று நம்மை இனவாதப் பிரச்சினை பற்றிப் பேசத்தூண்டுகிறது. இது இன்று இலங்கையில் மேலும்மேலும் கவலைக்குரிய விடயமாகிக்கொண்டிருக்கிறது. நமது நாட்டின் ஒரு முக்கிய சிறுபான்மை இனத்தவராகிய நம் தமிழ்ச் சகோதரரின் நீதியான கோரிக்கைகள் நியாயமான முறையில் நிறைவுசெய்யப்படாதவரை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படாது தடுக்கமுடியாது. மேலும், விரக்தியுற்ற உள்ளங்கள் நியாயமான கொள்கைகளைக் கைவிட்டுத் தீவிரவாதக் கொள்கைகளையும் கடைப்பிடிக்கக்கூடும். இதை உண்மையான நாட்டுப் பற்றுள்ள இலங்கையர் எவரும் விரும்பமாட்டார்.

---

### உடுப்பிட்டித் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகள்

இதுவரையில் உடுப்பிட்டித்தொகுதி த. இ. பேரவை கிளைகள் ஸ்திரமாக அமைக்கப்படவில்லை ஆதலால் தொகுதி இளைஞர்கள் யாவரும் அமைப்பாளருடன் ஒத்துழைத்து இக்கிளைகளை அமைப்பதற்கு உதவுமாறு உடுப்பிட்டி த. இ. பேரவை அமைப்பாளர் கேட்டுக்கொள்ளுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவு

**அன்பு நண்பா,**

மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன; முழு நிலா முகத்தினராய், முத்தமிழின் முழக்கம் கேட்டுச் சித்தம் மகிழ்வுற, தேனுண்ட வண்டாகிச் செம்மாந்து சிரித்திருந்த தமிழர் கூட்டம், யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னே—கோழைத்தனமாக குண்டேந்திவந்து பேடித்தனமாக தாக்கிய கோலேந்திகளின் வெறிப் படைக்குப் பலியாகி மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன!

1974 சனவரி பத்து—ஆம், இரத்தம் தோய்ந்த அந்த நாளை எண்ணும்போது நம் சித்தம் துடிதுடிக்கிறது; சிங்கள வெறிப்படை, அன்று ஆடிய மிலேச்சனமான வெறியாட்டம் நம்மைக் குமுறியெழ வைக்கிறது! நான்காவது உலகத்தமிழ் மாநாட்டின் இறுதி நாளிலே—உலகப்பெரும் தமிழ் அறிஞர்கள் முன்னிலையிலே — தமிழர்களும், தமிழச்சிகளும் தெரு நாய்கள் போல சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஏவலாளர்களால் அடித்து வீழ்த்தப்பட்ட அந்தப் பயங்கரக்கொடுமையை எந்தத் தமிழன் தான் மறந்திடமுடியும்? அதனை எண்ணும் போது எந்தத் தமிழன்தான் உணர்ச்சிவசப் படாமலிருந்திட முடியும்?

தமிழ் ஈழமெல்லாம் விழாக்கோலம்பூண்டு—கட்சி, அரசியல், மதம், சாதி, நாடு போன்ற எல்லைகளையெல்லாம் கடந்து அனைத்துத் தமிழர்களும தமிழின்பெயரால் ஒன்றுபட்டு, வெள்ளம்போல் திரண்டு தமிழ்மொழிக்கு எடுத்த அந்த வரலாற்றுச் சிறப்புப்பெற்ற பெரு விழாவின் இறுதி நாளன்று—கள்ளத்தால் நெருங்கி தமிழர் விழாவை இழவு ஆக்கிய சிங்கள ஏகாதிபத்தியத்தின் இனவெறியாட்டத்தை எந்தத்தமிழன்தான் மறந்திட முடியும்?

தமிழின் விழாக் கண்டிடவந்து — சிங்கள ஆதிக்க வெறியர்களின் தாக்குதலின் விளைவாக தமது உயிர்போக்கிக் கொண்டு — நம் நெஞ்சில் நிலையாகிவிட்ட தியாகத்திருவிளக்குகள் ஒன்பதின்மரையும் நாம் எண்ணிப்பார்க்கிருேம்; அவர்களின் இரத்தம் தோய்ந்த அந்த தியாக மண்ணைத்தொட்டு வணங்குகிருேம்!

**சின்னத்தம்பி நந்தகுமார்,**
**வேலுப்பிள்ளை கேசவராஜன்,**
**இராசதுரை சிவானந்தம்,**
**ராஜன் தேவரத்தினம்,**
**பரஞ்சோதி சரவணபவன்,**
**வைத்தியநாதன் யோகநாதன்,**
**ஆசிரியர் சிக்மறிங்கம்,**
**சிதம்பரி ஆறுமுகம்,**
**சின்னத்துரை பொன்னுத்துரை,**

ஆகிய தியாகச்சுடர்மணிகள் வீரசிங்கம் மண்டபத்தின் முன்ஞல் வீழ்ந்துகிடந்த காட்சியை—தமிழராகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக — தமிழின் சுவை கேட்கவந்த ஒரே காரணத்துக்காக — உயிர் பறிக்கப்பட்ட அந்தக் கொடுமையான சம்பவத்தை எண்ணும்போது நம் உள்ளம் எரிதழலெனப் பொங்கியெழுகிறது!

விழாக்காண வந்தோர் வேட்டையாடப்பட்டனர்; மாதரார் மானம் பறிக்கப்பட்டனர்; நிர்வாணிகள் ஆக்கப்பட்டனர்; அவர்களது நகைகள் சூறையாடப்பட்டன; தமிழர்களின் எலும்புகள் முறிக்கப்பட்டன; மண்டைகள் பிளக்கப்பட்டன; விரட்டிவிரட்டி தமிழர்களை கொடுமைப்படுத்தியது சிங்களப்படை! அப்போதுதான் மேற்கண்ட ஒன்பது தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன! தமிழ்த்தாய்மார்கள் பூவிழந்தனர்; பொட்டிழந்தனர்; மஞ்சள் குங்குமம் இழந்தனர்—சிங்கள ஏகாதிபத்தியத்தின் இந்தக் காரணமற்ற வெறியாட்டத்தினுல்!

**1974 சனவரி பத்தாம்நாள் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இந்தப்பயங்கரக்கொடுமை பற்றி இதுவரை எதுவித நீதி விசாரணையுமில்லை; விசாரணைக் குழு நியமிக்கப்படவேண்டும் என்ற ஒன்றுபட்ட தமிழர் கோரிக்கை தூக்கியெறியப்பட்டுவிட்டது! ஆனுல் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டின்போது ஒரு சிங்கள மாணவன் செத்தவுடன் உடனடியாக விசாரணை ஆணைக்குழு!**

இதுமட்டுமல்ல நண்பா — தமிழ் மாநாட்டில் இறந்த தமிழ்த்தியாகிகளுக்கு தமிழ் இளைஞர்கள் தாமாக ஒரு நினைவுச்சின்னத்தை நிறுவினுல்—அதுகூடப் பிடிக்கவில்லை இனவெறி பிடித்த சிங்கள ஆட்சிக்கு! 1975ம் ஆண்டு தை பத்தாம் நாள் நிறுவப்பட்ட நினைவுச் சின்னம், உடைத்தெறியப் பட்டது; மீண்டும் 1976ம் ஆண்டு தைபத்தாம் நாள் நிறுவப்பட்ட நினைவுச்சின்னமும் தரைமட்டமாக்கப்பட்டது; இவ்வளவு தூரம் வெறிபிடித்து, தமிழர்களுக்கு எதிராக சன்னதமாடுகிறது சிங்கள வல்லாட்சி.

**ஆனுல் — தமிழ்த்தியாகிகளுக்கு நிறுவப்படும் நினைவுச் சின்னத்தை ஆட்சியாளர்களின் எடுபிடிகள் எத்தனை முறை அடித்து நொருக்கினுலும்— "தடைகள் பல உண்டெனினும் தடந்தோளுண்டு" என்று ஆர்ப்பரித்தெழும் தமிழ் இளைஞர் கூட்டம் மீண்டும் மீண்டும் நினைவுச் சின்னத்தை நிறுவியே தீரும்!**

தென்னுபிரிக்காவிலும், ருெடீசியாவிலும் நடைபெறும் இனவெறி ஆட்சி கூட — இறந்தவர்களுக்கு எழுப்பப்படும் நினைவுச்சின்னத்தை உடைத்தெறியும் அளவுக்குத் தரம் தாழ்ந்ததில்லை! ஆனுல் இங்குள்ள சிங்கள ஏகாதிபத்திய இனவெறி ஆட்சியோ—தமிழர்களை அழித்தொழிப்பதுமட்டுமல்ல — தமிழ் தியாகிகள்

## அரசியல் மடல்

பற்றிய நினைவையே இல்லாமற்செய்யும் ஈனத்தனமான வேலையில் இறங்கியிருக்கிறது! தமிழ்ப்பகைவன் இரத்தினசார தேரோவுக்கு கொழும்பில் நினைவுத்தூண் எழுப்பியவர்கள்—தமிழ்த் தியாகிகளுக்கு யாழ்ப்பாணத்தில் எழுப்பப்படும் நினைவுத்தூண்களை திட்டமிட்டு உடைத்தெறிகிருர்கள்!

நண்பா, 1974ம் ஆண்டு தை பத்தாம் நாள் தமிழ் மாநாட்டின்போது நடைபெற்ற பயங்கரச் சம்பவங்களுக்கும்— தமிழ்த்தியாகிகளுக்கு நாம் நிறுவும் நினைவுச் சின்னங்கள் உடைத்தெறியப்படுவதற்கும் — இதுபோன்ற சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்!

**நமது தமிழ்ப் பூமியை — தமிழ் ஈழத்தை— நாமே ஆளுகின்ற சுதந்திரம் நமக்கு இல்லாதிருப்பதுதான் இதற்கெல்லாம் அடிப்படைக்காரணமாகும்! நாம் அடிமைகளாக — ஆளப்படும் இனமாக — இருப்பதுதான் இந்தக்கொடுமைகளுக்கெல்லாம் மூலகாரணமாகும்!**

1619ம் ஆண்டு வரை நாம் ஆண்டிருந்த தமிழ் ஈழத்தை—1833ம் ஆண்டு வரை அந்நியனுல் தனியாக நிர்வகிக்கப்பட்டு வந்த தமிழ் ஈழத்தை—350 ஆண்டுகளுக்கு முன் இழந்த நம் தமிழ் மண்ணை மீட்டு, அடிமைத்தளையை அறுத்தெறிந்து சுதந்திர புருஷர்களாக வாழவேண்டுமென்ற மகோன்னத இலட்சியத்தை சென்றடைய தீவிரமாக உழைக்கவேண்டியவர்களாக நாம் இருக்கிருேம்!

1974தைமாதம் 10ம் நாளில் நமது மக்களுக்கு சிங்களப்படைகளினுல் இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான கொடுமைகள்பற்றி எண்ணும்போது—நம்மைநாமே ஆளும் நிலையிருந்திருந்தால், இத்தகைய கொடுமைகள் ஏற்பட்டிருக்குமா? நமது படையும், கொடியும், முடியும் அரசும் இருந்திருந்தால், இத்தகைய வேதனை நிகழ்ச்சிகள் தோன்றியிருக்க முடியுமா என்ற கேள்வியையும் நாம் எழுப்ப வேண்டும்!

நாம் அடிமைகளாக — ஆளப்படுவோராக —[illegible] வாழ் [illegible] மாற்ருர் நம்மை நசுக்குகிருர்கள்; சுட்டுப்பொசுக்குகிருர்கள்! பொட்டுப்பூச்சிகளாக — புன்மைத்தேரைகளாக—நமது தமிழ் சமுதாயம் கொடுமைகளுக்குள்ளாக்கப்படுகிறது! தை பத்தாம் நாளில் தமிழ்த்தியாகிகள் வீழ்ந்த மண்ணை முத்தமிட்டு வணங்கும்போது நமது நெஞ்சங்களில் விடுதலைக்கனல் மூண்டெழவேண்டும்! சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழ்ஈழத்திலிருந்து விரட்டியடிப்பதென்று உறுதி பூண்டிடவேண்டும்!

இது தேசிய இனங்கள்—நாடுகள்—ஏகாதிபத்தியங்களிலிருந்து விடுதலை பெறும் காலகட்டம்! நான்கு ஆண்டுகள் இடைவிடாத போராட்டத்தின்பின்னர் பிலிப்பைன்சின் தென்பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தமது பிரதேசத்துக்கு பூரண சுயாட்சி பெறுகின்ற போரிலே ஈட்டியுள்ள வெற்றியை சென்ற கிழமை உனக்கு எடுத்துக்காட்டியிருந்தேன்; இதேபோல ஸ்பெயின் நாட்டிலும், 'பாஸ்க் 'கற்றலான்' ஆகிய இரண்டு தேசிய இனங்கள் விடுதலைகோரிப் போராடிவருகின்றன; பாலஸ்தீனியர்கள் தமக்கோர் தாயகம்கோரி மிகவும் தீவிரமாகப் போராடி அகிலத்தையே உலுக்கி வருகின்றனர்; கனடாவிலோ 'குவீபெக்'மாகாணம் தனது சுதந்திரப்போராட்டத்தில் வெற்றிப்படியை மிதித்துவிட்டது!

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டுள்ள ஸ்கொட்லாந்து மக்களும், வேல்ஸ் மக்களும் தத்தம் நாடுகளைத் தாமே ஆளவேண்டுமென்று கோரி பல ஆண்டுகளாக நடத்திவரும் கிளர்ச்சியும் வெற்றிவாயிலை நெருங்கி வருகிறது!

நண்பா, 150 ஆண்டுகளுக்கு முன்னர்—அதாவது 1833ம் ஆண்டு ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளால் தமது நிர்வாக வசதிக்காக இரண்டு தனித்தனி நாடுகளாக இருந்துவந்த சிங்கள நாடும் தமிழ் ஈழநாடும் இருநாடுகளினதும் விருப்பத்துக்கு எதிராக பலவந்தமாக இணைக்கப்பட்டதுபோலவே — 269 ஆண்டுகளுக்கு முன்—1707ம் ஆண்டு — இங்கிலாந்து நாட்டுடன், 'ஸ்கொட்லாந்து' 'வேல்ஸ்' ஆகிய நாடுகள் இணைக்கப்பட்டு 'ஐக்கிய இராச்சியம்' உருவாக்கப்பட்டது! அன்றிலிருந்து 'வேல்ஸ், மக்களும், 'ஸ்கொட்டிஷ்' மக்களும் தங்கள் நாட்டின் சுதந்திரத்தை மீட்டுக்கொள்ளப் போராடிவருகிருர்கள்!

வேல்ஸ் மக்களும், ஸ்கொட்டிஷ் மக்களும் நடத்திவரும் சுதந்திரப்போராட்டம் பிரிட்டிஷ் அரசை அசைத்துவிட்டிருக்கிறது. இராணுவம், வெளிநாட்டு உறவு, வரி விவகாரங்கள் — ஆக இந்த மூன்றே மூன்று அதிகாரங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து ஆட்சி அதிகாரங்களையும், 'வேல்ஸ்' 'ஸ்கொட்டிஷ்' நாடுகளுக்கு அளிக்கும் வெள்ளையறிக்கையொன்றை இங்கிலாந்தின் தொழிற்கட்சி அரசாங்கம் இப்போது வெளியிட்டிருக்கிறது; வேல்ஸ் பிரதேசத்துக்கும், ஸ்கொட்லாந்து பிரதேசத்துக்கும், தனித்தனியான சட்டசபைகளை அமைத்துக்கொடுக்கவும், அவற்றுக்கு விரைவில் தேர்தலை நடத்தவும் இந்த வெள்ளையறிக்கை வகைசெய்கிறது! ஒற்றையாட்சி அமைப்புள்ள இங்கிலாந்துநாட்டிலே ஸ்கொட்டிஷ், வேல்ஸ், மக்களின் விடுதலைத் தாகத்தை தீர்த்துவைக்க இவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கமுன் வந்திருக்கிறது பிரிட்டிஷ் அரசு!

எனவே நண்பா, இது சுதந்திரம் பெறப் போராடும் காலம்! இனங்கள், நாடுகள், விடுதலை வெற்றிக்கீதம் இசைக்கும் காலம்! ஏகாதிபத்தியங்கள் தூள் தூளாகும் காலம்!! எனவே நாம் மேற்கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் பயணமும் நிச்சயம் விரைவில் வெற்றி பெறும்; விடுதலைக் காற்று நமது திசையிலும் நிச்சயமாக மிக விரைவில் வீசும் என்ற அந்த உறுதியான நம்பிக்கையுடன்—தை பத்தாம் நாளில் தமிழுக்கு உயிர் தந்த தியாக தீபங்களை கைகூப்பி வணங்கி — அந்த உத்தமர்கள்மீது சத்தியமெடுத்து—விடுதலைப்பாதையில் வேகமுடன் விரைவோம்! பெறுவோம் தமிழ் ஈழம்!

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இஸ்ரேலும் இலங்கையும்!

"ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கல்லடி" என்று கூறிய பாதிரியாரைப்போல, இலங்கை அரசும் ஊருக்கும் உலகத்துக்கும் உபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கிறது!

இலங்கைத்தீவில், தமிழ்தேசிய இனத்தின் சுதந்திரத்தை அபகரித்து—தமிழ் பேசும் மக்களின் தாயகமான தமிழ் ஈழநாட்டை ஒரு கைப்பற்றப்பட்ட பிரதேசம் போலக் கருதி — அங்கு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களைப் புகுத்தி — மற்றோர் தேசிய இனத்தின் வாழ்விடத்தை கபளீகரம் செய்கின்ற பாரிய இனக்கொலையை புரிந்துவரும் சிங்கள ஏகாதிபத்தியம்தான் உலகத்தின் முன்னால் சமாதானத் தூதுவனாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் விடுதலை விரும்பிகளின் நண்பனாகவும் வேஷமிட்டுவருகிறது!

வரலாற்று ரீதியாகவும், சர்வதேச சட்டரீதியாகவும் சிங்கள அரசுக்கு எள்ளளவும் உரிமையோ பாத்தியதையோ அற்ற தமிழ்ஈழப் பிரதேசங்களை, தன்னுடைய படைபலத்தையும் அதிகாரத்தையும் பிரயோகித்து ஆக்கிரமித்து அடக்கியாண்டுவருவதுடன் — தமிழ்ஈழத்தில் சர்வதேச சட்டங்களுக்கு விரோதமான முறையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழ்ஈழப் பிரதேசங்களை விழுங்கிவருகிறது!

இலங்கையில் தமிழ் ஈழநாட்டையும், தமிழ்ஈழத் தேசிய இனத்தையும் அழித்தொழிக்கும் இத்தகைய சர்வதேச சட்டமீறல்களை கன கச்சிதமாக நடத்திவரும் சிங்கள ஏகாதிபத்திய அரசுதான், உலக அரங்கில் பகல்வேடம்போடுகிறது; பத்தினியாட்டம் ஆடுகிறது!

இலங்கையில் தமிழ்ஈழ மக்களின் விடுதலையை மறுத்து — அவர்களை அடக்கியொடுக்கிவரும் இலங்கை அரசுதான்—உலக அரங்கில் ஒடுக்கப்படுபவர்களின் உரிமைப் பாதுகாவலனாக நாடகம் ஆடுகிறது!

கடந்த வாரம் ஐ. நா. பொதுச்சபையில் பேசிய இலங்கைப் பிரதிநிதி திரு. நெவில் கனகரத்தின — இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்புப்போக்கை கடுமையாகச் சாடியிருக்கிறார்! சர்வதேச சட்டப்படி இஸ்ரேலுக்கு சொந்தமாக இல்லாத பிரதேசங்களில், நிரந்தரமான இஸ்ரேலிய குடியேற்றங்களை நடத்திவரும் இஸ்ரேல், சமாதானம் என்ற சொல்லை எப்படி உச்சரிக்கமுடியும்? அந்நிய பிரதேசங்களை இஸ்ரேல் தனது ஆதிக்கத்துக்குள் வைத்துக்கொண்டு அது எப்படி சமாதானம் பேசமுடியும்? சமாதானம் நீதியின் அடிப்படையில் ஏற்படவேண்டும்; பலமுள்ளவன் பலமற்றவன் மீது திணிக்கும் 'சமாதானம்' வேண்டாம்; 'சுடுகாட்டு' அமைதிவேண்டாம்; என்று எல்லாம் அடித்து முழக்கியிருக்கிறார் இலங்கைப் பிரதிநிதி!

**இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நிச்சயமாக கண்டிக்கப்படவேண்டியது; எதிர்க்கப்படவேண்டியது என்பதில் நமக்கு கருத்துவேறுபாடில்லை!**

ஆனால் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைக் கண்டித்து உலக அரங்கில் பெரிய முழக்கம்போடும் இலங்கை — தனது சொந்த நாட்டில் — இலங்கையில்—என்ன செய்கிறது? என்ற கேள்வியைத்தான் நாம் எழுப்புகிறோம்!

**இஸ்ரேல், பாலஸ்தீனர்களின் பிரதேசத்தில் எதைச் செய்கிறதோ — அதையே இங்கு தமிழ்ஈழப் பிரதேசங்களில் சிங்கள அரசாங்கம் செய்துவருகிறது.**

இஸ்ரேல் செய்வதாவது உலகநாடுகளின் கண்களில் தெரியக்கூடியதாக வெளிப்படையாக இருக்கிறது; சிங்கள அரசு தமிழ்ஈழப் பிரதேசங்களை ஆக்கிரமித்து, சிங்களக் குடியேற்றங்களை நடத்திவருவதோ — மிகவும் நாசூக்காக — உலகநாடுகளின் கண்களுக்கு தெரியாதவாறு நடைபெற்றுவருகிறது!

பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேலியர்களைக் குடியேற்றுவதற்கு சர்வதேச சட்டப்படி இஸ்ரேலிய அரசுக்கு எவ்வாறு உரிமை கிடையாதோ—அதேபோல தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய தாயகமான தமிழ்ஈழப் பிரதேசங்களில் சிங்களவர்களை குடியேற்றுவதற்கு சிறிலங்கா அரசுக்கு சர்வதேச சட்டப்படி கிஞ்சிற்றும் உரிமை கிடையாது!

தமிழ்ஈழம் 1833ம் ஆண்டுவரை தனித்து நிர்வகிக்கப்பட்டுவந்த ஒரு தனிநாடு; 1972ம்ஆண்டு மே 22ம்திகதி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடனான தொடர்புகள் இறுதியாகத்துண்டிக்கப்பட்டு, 'சிறிலங்கா' தனிக்குடியரசானவுடன், 'தமிழ்ஈழமும்' சர்வதேச சட்ட நியதிகளின் ஒரு தனிக்குடியரசாகிவிட்டது; ஆனால் பலம் குறைந்த தமிழ்ஈழம் தனக்கு கிடைத்த அந்த சுதந்திரத்தை அனுபவிக்கமுடியாதபடி படைபலமும், ஆதிக்கபலமும் அதிகாரபலமும் கொண்ட சிங்கள சிறிலங்கா அரசு, தமிழ் ஈழத்தின்மீது ஏகாதிபத்தியம் செலுத்திவருகிறது; தமிழ் ஈழத்தை சட்டவிரோதமாக அடக்கியாண்டு ஆட்சி புரிந்துவருகிறது!

இந்த உண்மைகள் உலக அரங்கில் மிகவும் தெளிவாகவும், கவர்ச்சிகரமாகவும், ஆணித்தரமாகவும் முன்வைக்கப்படின்—சிங்கள அரசு போடும் வெளிவேஷம் கிழித்தெறியப்படும்! தமிழ் ஈழத்திலிருந்து சிங்கள அரசு வெளியேறியே தீரவேண்டிய உலக ரீதியான நிர்ப்பந்தமும் ஏற்படும்! அதற்கு நமது பணி இன்னும் துரிதமடையவேண்டும்!

# உழவர் திருநாளாம் பொங்கற் திருநாள் தமிழர் பண்பாட்டுப் பெருவிழாவாகட்டும்!

**தை பிறந்தால் வழி பிறக்குமென்பது தலைமுறை தலைமுறையாகத் தமிழர் பேணிப் போற்றி வரும் நம்பிக்கைபொங்கல்பெருநாள் உழவர் பெருநாள் மட்டுமல்ல அது தமிழர் தம் தேசியத் திருநாளும்கூட தமிழர் வாழ்வில் பழையன கழிந்து புதியன புகும் நாள். தமிழ் ஈழத்தைப் பொறுத்த மட்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்குப் பின் அதன் முக்கியத்துவம்மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.**

1974ம் வந்த தை முதல் நாளை தமிழ் ஈழம்கொண்டாட இயலவில்லை. காரணம் யாழ்ப்பாணத்தில் கோலகலமாக நடந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியின் போது தமிழ் கேட்க வந்த ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் கூட்டத்தின் மத்தியில் சிங்கள பௌத்த சோசலிச அரசின் காவல் படையினர் கட்டவிழ்த்து விட்ட பலாத்காரம் பச்சைத் தமிழர் பத்துப்பேரின் மரண ஓலத்துடன் தமிழ் ஈழத்தைத் துக்கத்தில் மூழ்கடித்ததே!

கடந்த ஆண்டு வந்த உழவர் திருநாளை அரசு கரிநாளாகவே பிரகடனப் படுத்தி, கலை கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடாத்தவிடாது தடுத்தது. திரைப்படமாளிகைகள் மூடப்பட்டனபொங்கல் விழா நிகழ்ச்சிகளுக்கு ஒலிபெருக்கி அனுமதி மறுக்கப்பட்டது. இத்தனைகெடுபிடிகளுக்கும் காரணம் செஞ்சீனாவின் சிற்பி—தொழிலாள விவசாயிகளின் தலைவர் சூஎன்லாய் அவர்களின் மறைவே. அவர் பொங்கல் தினத்தில் மரித்தார் இல்லை; அல்லது அன்னாரின் மரணச் சடங்குகள்தானும் பொங்கல் நாளில் இடம்பெறவில்லை. சீனாவுடன் தனக்குள்ள நட்பின் வெளிப்பாடாகவே அதன் தலைவரது மறைவையொட்டி ஒருநாளை இலங்கை அரசு துக்கநாளாக அறிவிக்கவேண்டியதாக இருந்தது. எதிலும் போலியாக நடந்துகொள்ளும் இலங்கை அரசு புரட்சித் தலைவருக்கு மரியாதைசெய்வதிலாவது தாராள மனப்பான்மையைக் காட்டத் தவறியது. புதிதாக ஒரு நாளைப் பொதுவிடுமுறையாக அறிவிக்காது, ஏற்கனவே பொதுவிடுமுறையாக நாள் காட்டியில் குறிக்கப்பட்டிருந்த பொங்கல் நாளையே கரிநாளாகவும் பொதுவிடுமுறையாகவும் அறிவித்திருந்தது.

தமிழ் ஈழத்தின் வலிய இரு கரங்களான உழவர்களும், தொழிலாளரும் தமது தேசியப் பெருநாட்களைக் கொண்டாடுவதற்கே சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் தயவில் தங்கியிருக்க வேண்டும் முன்பு தொழிலாளர் தினம் வெசாக்பெருநாளையடுத்து வந்ததால் மே தின ஊர்வலங்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே! அப்போது ஏனைய இடதுசாரி இயக்கங்கள் அரசின் ஆணைக்குக்கட்டுப்பட்டு அகிலத் தொழிலாளர் தினத்தைப்பகிஸ்கரித்த போது தமிழ் ஈழத்தில் மொழிவழித்தொழிற்சங்கங்களும், சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் தோழர்கள் மட்டுமே அரசின் ஆணையை எதிர்த்து மே நாளைக்கொண்டாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிலாளர் ஊர்வலம் பொலிசாரின் குண்டாந்தடிப் பிரயோகத்துக்கு இலக்காகியது அன்றைய தினமே உலக மக்களுக்கு பீக்கிங் வானொலியில் அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர், விவசாயிகள் தினக்கொண்டாட்டங்களிலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் வாலாட்டலதத் தமிழ் ஈழமக்கள் சகித்துக் கொள்ளவேண்டுமா? ஆகவே தான் தமிழ் ஈழத்தை மீள்விக்கும் வட்டுக்கோட்டைத் தீர்மானம்! இதனை உலகத் தொழிலாளரும் புரிந்து கொள்வார்கள்.

எதிர்வரும் உழவர் தினக் கொண்டாட்டத்தை, கடந்த மே நாள் ஊர்வலத்தில் விவசாயிகள் கலந்துகொண்டது போல் தமிழ்த்தொழிலாளர் யாவரும் கோலாகலமாகக் கொண்டாடவேண்டும். திணைக்களங்கள்தோறும் இன்றுமொழிவழித்தொழிற் சங்கங்கள் கலைவாணி பூசையைச் சிறப்பாகக்கொண்டாடுவது போல் பொங்கல் தினக் கலைவிழாக்களுக்கும் ஏற்பாடுசெய்யவேண்டும். பொங்கல் பெரு நாள் தமிழ் இனத்தின் தேசியத் திருநாள். உலகெங்கும் உள்ள தமிழ் மக்களை இணைக்கும் நன்னாள். பொங்கல் பெருநாள் தை முதல் நாளோடு கொண்டாட்டங்கள் முடிவுறவேண்டியதில்லை. அடுத்துவரும் நாட்களிலும் அதனைக் கொண்டாடுவதன் மூலம் தமிழர் மத்தியில் தேசிய பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்தலாம். பொங்கல் விழாக்கள் தமிழர் பண்பாட்டுப் பெருவிழாக்களாகவே அமையட்டும்.

பொங்கல் பெருநாளை அடுத்து தமிழ் ஈழத்தில் பெரும்பண்பாட்டுப் புரட்சி ஏற்படுமென எதிர்பார்ப்போம். தமிழ் ஈழத்தில் உள்ள திரைப்பட மாளிகைகள் தாம் விநியோகிக்கும் நுழைவுச் சீட்டுக்களில் அன்னைத் தமிழ்மொழியைப் புகுத்தவிருக்கிறார்கள். தமிழ் இளைஞர்வேண்டுகோளின் பேரில் யாழ்ப்பாண வர்த்தகப் பேரவையும் வர்த்தக தாபனங்களது விளம்பரப் பலகைகளில் தமிழ்மொழிக்கு முதல் இடம் தரமுன்வரலாம். யாழ்ப்பாணத்தில் சிங்களத்தில் விளம்பரம்வெளியிடும் தமிழர் தாபனங்களைப் பொதுமக்கள் பகிஷ்கரிக்க முன்வரலாம்? யாழ்ப்பாண வர்த்தகப்பேரவையின்செயலாளர் திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் நயமாகப் பேசி காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திண்ணியர் அவர் முயல்வாரேன எதிர்பார்க்கலாம், பெரும்பாடசாலைகளது பொது வைபவங்கள், பரிசளிப்பு விழாக்கள், இரவு விருந்தின் உரைகள் யாவும் தமிழில் இடம்பெற பொங்கல் விழாவில் முகையவிழ்க்கும் பண்பாட்டுப்புரட்சியைப் பாடசாலைகளிலும் பரப்ப மாணவ, மாணவிகள் உறுதியுரை எடுப்பார்களாக! பெரும்போட்டி ஒலிபெருக்கி வர்ணனைகள், நுழைவுச் சீட்டுக்கள், உத்தியோகத்தர் அட்டைகள், சிறப்பு மலர்கள் யாவும் தமிழில் மலர எதிர்வரும் பொங்கல்பெருநாளில் உறுதிசெய்வோம்.

—திரவியம்

---

## அவசரகால...

—1-ம் பக்கத் தொடர்

புகையிரத தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புவேலை நிறுத்தத்தை தொடர்வதென தீர்மானித்துள்ளது.

இது இப்படியிருக்க, ஏற்கெனவே அறிவித்திருந்தபடி அரசாங்க சேவையிலுள்ள 30,000 லிகிதர்களும் சில கோரிக்கைகளை முன்வைத்து 7-1-77ல் முதல் நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ஏற்கெனவே சட்டப்படி வேலைசெய்துவரும் அரசாங்க டாக்டர்கள், அத்தியாவசிய சேவை பிரகடனத்தின் பின்னர், தமது நிலையை இன்னும் தெளிவாக்கவில்லை!

துறைமுக அதிகார சபையைச்சேர்ந்த ஊழியர்களின் வேலைநிறுத்தமும் நீடிக்கிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் தறுவாயிலுள்ள நிலைமை இது. இந்நிலையில் அரசாங்கம் அடுத்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி பலவாறான ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

அவசரகால விதிகளை மீறி வேலை நிறுத்தத்திலீடுபட்டிருக்கும்தொழிற்சங்கங்களின் தலைவர்கள் எந்த நிமிடமும் கைது செய்யப்படலாம் என்றும் அத் தொழிற்சங்கங்கள் சட்டவிரோதமானவையென்று பிரகடனப் படுத்தப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தாலன்றி;

# எந்தக் கட்சி ஆட்சிபீடமேறினாலும் அது ஏகாதிபத்திய ஆட்சிதான்!”

## தமிழின விடுதலையொன்றே கூட்டணியின் இலட்சியம்!

## கோப்பாய் பா. உ. கதிரவேற்பிள்ளை அறிக்கை!

“தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரம் கிடைத்த பிறகே இந்நாட்டில் ஜனநாயகம் நிலவ முடியும், அதுவரை எந்தச் சிங்களக் கட்சி ஆட்சி செய்தாலும் அது தமிழ் இனத்தின்மீது நடத்தப்படும் ஏகாதிபத்திய ஆட்சியேயன்றி ஜனநாயக ஆட்சியல்ல; சிங்கள மக்களை யார் ஆளுவது என்று அவர்கள் தீர்மானிக்கட்டும்; தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளும் வழியையே தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது.”

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக்குழுவின் உத்தரவுக்கிணங்க இன்றைய அரசியல் நிலைமைகளை விளக்கி கோப்பாய் பா. உ. திரு. கதிரவேற்பிள்ளை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார். அவ்வறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

“தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பற்றிச் சென்ற சில வாரங்களாகப் பல்வேறு வதந்திகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. இவற்றை ஆராய்ந்த கூட்டணி நடவடிக்கைக்குழு உண்மை நிலையை விளக்கி மக்களுக்கு ஓர் அறிக்கை விடும்படி பணித்ததின்பேரில் இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது.

“தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எவ்வகையான பேச்சுவார்த்தைகளும் இதுவரை நடைபெறவில்லை. தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டபின்பு ஆறு அம்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து அவற்றையொட்டி எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தித் தமிழ் இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தோம் அரசு எவ்வித பதிலும் தராது தட்டிக் கழித்தது.

1973ம் ஆண்டில் பிரதமரின் செயலாளரையும், அமைச்சர் இலங்கரத்தினாவையும் பின்னவரின் இல்லத்தில் அவர்கள் அழைப்பின் பேரில் சந்தித்துப் பேசினோம். சமீபத்தில் அமைச்சர் இலங்கரத்தினா அதையே பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். எமது கோரிக்கைகளைச் செவிமடுத்த அமைச்சர், அப்போது வெளிநாடு சென்றிருந்த பிரதமர் திரும்பியபின் அவரோடு பேசிவிட்டு, மீண்டும் எங்களை அழைப்பதாகக் கூறினர்; அதன்பின் அவரிடமிருந்தோ அரசாங்கத்தரப்பில் வேறு யாரிடமிருந்தோ எவ்வித அறிவித்தலும் எமக்குக் கிடைக்காதபடியால் நாம் யாருடனும் பேசச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

தமது ஆட்சிகாலத்தின் இறுதி ஆண்டாகிய இவ்வாண்டில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அரசியல் அமைப்பைத் திருத்தி நீடிக்க அமைச்சர்கள் சிலரும் ஆளும்கட்சி உறுப்பினர் சிலரும் ஆவல் கொண்டிருக்கின்றனர் என்பது நாடறிந்த விஷயம். அதற்கு ஆளும் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மையில்லை. தமிழ் உறுப்பினர்களின் ஆதரவைப்பெறலாம் என்ற எண்ணத்தில் அரசியல் அமைப்புத் திருத்தத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் சிலவற்றை வழங்கும் விதிகளைப் புகுத்தப்போவதாக அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயகாவும் வேறு சிலரும் தனிப்பட்ட முறையில் எமது நாடாளுமன்ற உறுப்பினரைப் பாராளுமன்றத்தில் சந்தித்தபோது கூறினர். அவ்வுறுப்பினர்கள் அவர்களின் யோசனை பற்றி எமது மக்களின் கருத்தை அறியும் பொருட்டுச் சில கருத்தரங்குகளில் அவற்றை எடுத்துக் கூறினர்; கூட்டணிக்கு இது பற்றி எவ்வித அறிவித்தலும் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லை. இவற்றையொட்டிக் கூட்டணி ஆலோசிக்கவோ இல்லை.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பாராளுமன்ற ஆயுட்காலம் நீடிக்கப்பட்டால் எமது ஆதரவோடு தாங்கள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தல் முக்கியமானதல்ல என்று நாம் அறிவித்தோம். எங்கள் சார்பில் அப்படிக் கூறுவதற்கு ஐ. தே. கட்சிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தினோம். இது ஐக்கிய தேசியக் கட்சியினருக்குக் கசப்பாயிருந்தால் அதற்கு நாம் ஒன்றும் செய்ய இயலாது.

அற்ப சலுகைகளுக்காக ஜனநாயகத்தை விற்கவேண்டாமென்று எமக்கு உபதேசம் செய்யப்புறப்பட்டிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் திரு. தேவநாயகம். உரிமைகளைப் பறித்து அரைப்பங்கினரின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்த கட்சியின் உறுப்பினர் ஜனநாயகத்தைக் காக்குமாறு எமக்குக் கூறுவது வேடிக்கையானது. தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரம் கிடைத்தபின்பே இந்நாட்டில் ஜனநாயகம் நிலவமுடியும். அதுவரை எந்தச் சிங்களக்கட்சி ஆட்சி செய்தாலும் அது தமிழ் இனத்தின்மீது நடத்தப்படும் ஏகாதிபத்திய ஆட்சியேயன்றி ஜனநாயக ஆட்சி அல்ல. சிங்கள மக்களை யார் ஆளுவது என்பதை அவர்கள் தீர்மானிக்கட்டும். தமிழ் மக்கள் தம்மை ஆளும் வழியையே தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது.



## இஸ்ரேலிய...

—1-ம் பக்கத் தொடர்

குறிப்பிடுவது “சுடுகாட்டு அமைதியை”த்தான்! பலம் குன்றியவர்கள் மீது பலம் கூடியவர்கள் “திணிக்கும்” சமாதானத்தைத்தான் இஸ்ரேல் சமாதானம் என்று கூறுகிறது. மற்றவர்களின் எல்லைப் பிரதேசங்களுக்குள் நின்றுகொண்டு இஸ்ரேல் சமாதான நாடகம் ஆடுகிறது’ என்று இஸ்ரேலைக் கடுமையாகச் சாடிப்பேசியிருக்கிறார் திரு. நெவில் கனகரத்தினா.

“எந்த ஒரு சர்வதேச சட்டத்தின்படியும் இஸ்ரேல் நாட்டுக்குச் சேரமுடியாத (பாலஸ்தீனியர்களுக்கு சொந்தமான) ஒரு பிரதேசத்தில் திட்டமிட்டுநிரந்தரமான இஸ்ரேலியக் குடியேற்றத்தை பலவந்தமாக புகுத்திக்கொண்டு இஸ்ரேல் எப்படி சமாதானம்பற்றி இங்குவந்து பேச முடியும்? நீதியின் அடிப்படையில் மட்டுமே சமாதானம் ஏற்படமுடியும்!” என்றும் முழங்கியிருக்கிறார் திரு. நெவில் கனகரத்தினா.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிச்சயமாகக் கண்டிக்கப்படவேண்டியவைதான்; ஆனால் பாலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் செய்யும் அதே குற்றத்தை இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிராக இழைத்துவரும் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிக்கு இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? தார்மீகபலம் இருக்கிறது?

இலங்கையில், தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் அவர்களின் பூர்வீகத் தாயகம்; 1833வரை தனியாக — தமிழ்ஈழம் விளங்கி வந்திருக்கிறது; 1619வரை தமிழர்கள் ஆண்டிருந்த தனிநாடு; சர்வதேச சட்டத்தின்படி, தமிழ் மக்களுக்குரிய பிரதேசம்; சிங்கள நாட்டிலிருந்து வேறுபட்ட, புறம்பான தமிழினத்தின் தாயகம்; தமிழ் மக்களின் இந்தத் தாயகத்தில், கடந்த பல ஆண்டுகளாக சர்வதேச சட்டங்களுக்கு விரோதமான முறையில் திட்டமிட்டு சிங்களவர்களைக் கொண்டுசென்று நிரந்தரமாகக் குடியேற்றி தமிழ் பேசும் மக்களின் பூர்வீகத் தாயகத்தை ஆக்கிரமித்துச் சூறையாடிவருகிறது சிங்கள அரசு.

பாலஸ்தீனியர்களின் பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கு திட்டமிட்ட இஸ்ரேலிய குடியேற்றங்களை இஸ்ரேலிய அரசு பலவந்தமாக புகுத்திவருவது போலவே—தமிழ்ஈழப் பிரதேசத்தையும் ஒரு கைப்பற்றப்பட்ட பிரதேசம் போல சிங்கள அரசு வைத்துக்கொண்டு, அங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை புகுத்தி தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்து வருகிறது.

**இஸ்ரேல் அரசு செய்யும அதே குற்றத்தையே இலங்கை சிங்கள அரசும் செய்துவருகிறது உங்கள் அநீதியை திருத்தாமல், அடுததவனைக் கண்டிக்க** இலங்கைக்கு என்ன அருகதையிருக்கிறது? உன் கண்ணிலிருக்கும் உத்தரத்தைக் கவனியாது அயலவன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன்? என்று இஸ்ரேல் இலங்கை பிரதிநிதிகளிடம் திருப்பிக்கேட்டிருந்தால், இலங்கைப் பிரதிநிதி நாக்கைப் பிடுங்கியிருக்க வேண்டியல்லவா ஏற்பட்டிருக்கும்? உலக அரங்கில் அந்த நிலைமை விரைவில் ஏற்படத்தான் போகிறது; இலங்கை சிங்கள அரசின் வெளிவேஷமும் கபடத்தனமும் உலகின் கண்களுக்குத் தெரியத்தான் போகிறது!”

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்ப்பாணத்...

—1-ம் பக்கத் தொடர்

யோர் மலர் தூவி அஞ்சலி செய்வர். தமிழ்த் தியாகிகளின் நினைவாக ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கப்படவிருக்கிறது.

இதையடுத்து அன்றுமாலை மூன்று மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர். இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வாசிக்கப்பட்ட கட்டுரைகள் தொகுப்பு நூலாக வெளியிடப்படவிருக்கிறது.

10-1-77 மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில தமிழுக்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக தமிழர் விடுதலைக் கூட்டணி மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறது. இக்கூட்டத்தில் கூட்டணித் தலைவர்கள் தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை பிரமுகர்கள் உரையாற்றுவார்கள். இக்கூட்டத்துக்கான பொலிஸ் அனுமதியை பெறும் முயற்சியில் கூட்டணியினர் ஈடுபட்டுள்ளனர்.

## தியாகிகள் தின..

—1-ம் பக்கத் தொடர்

“ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தநாள் தொடக்கம் நடைபெற்ற சம்பவங்களுள் தமிழ் மக்கள் மனதைவிட்டகலாத மறக்க முடியாத சம்பவம் ஜனவரி 10ம் திகதிய சம்பவமாகும் அன்று பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதலினால் பதைக்கப் பதைக்க பலியான ஒன்பதின்மர் நினைவாக, சின்னம்கூட அமைக்க அனுமதியாத அரசின் நீதி நியாயமற்ற போக்கை தமிழ் ஊழியர்களாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில், இதுவரையும் இச்சம்பவத்தையிட்டும் அதன்பின் புத்தளத்தில் முஸ்லிம்கள் பலர் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கும், செம்மணியில் வங்கி ஊழியரான இளைஞர் திரு. பரராசா பொலிசாரினால் படுகொலை செய்யப்பட்டதற்கும், விசாரணைக் கமிஷன் நியமிக்க விடுத்த கோரிக்கையை அரசு புறக்கணித்து வருவதையும்—

‘சிங்களத்தேர்ச்சியின்மை’ என்ற காரணத்தினால் தமிழ் ஊழியர்கள் பழிவாங்கப்படுவதையும், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜனவரி 10ம் திகதி நினைவு நாளன்று தங்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

பல்கலைக்கழகத்தில் பலியுற்ற சிங்கள மாணவனுக்கு உடன் விசாரணைக் கமிஷன் நியமித்தீர்கள்! ஆனால் பல தமிழர்கள் பொலிசாரினால் படுகொலை செய்யப்பட்டதற்கு விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படாதது ஏன்?

விசாரணையின்யின்றி தமிழ் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது ஏன்? இந்நினைவு நாளில் மீண்டும் அரசின் கவனத்திற்கு இவற்றைக்கொண்டு வருகின்றோம்.”


**ஆங்கிலம்**

[பேச்சுப் பயிற்சியுடன்]

O. L. HNCE NCGE

திட்டமிட்ட ஆறுமாத பயிற்சி

- உயர்கல்வி மாணவர்
- உத்தியோகத்தர்
- மகளிர்
- வெளிநாடுசெல்வோர்

ஆரம்பம்: 21 - 1 - 1977

Centre For English Education

1, 56 ஆம் ஒழுங்கை
வெள்ளவத்தை
[உருத்திரா மாவத்தையின் தொடர்ச்சி]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தான் வேதம் ஓதுகிறது!

## சிறையிருக்கும் தமிழ் இளைஞர் பற்றி குமாரசூரியரும் கொக்கரிக்கிறார்!

### தமிழ் இளைஞர் பேரவையில் துரோகிகளுக்கு இடமில்லை!

**இரத்தவெறிபிடித்த ஓநாய் ஆட்டுக்குட்டி மீது பாசமும் பரிவும் காட்டியது போன்று — இரவுமுழுவதும்உடலை விற்றுவாழும்பரத்தை பகலில் கண்ணகி வேடம் போட்டதைப் போன்று — கசாப்புக் கடைக்காரன் ஜீவ காருண்ணியம் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வதுபோன்று — சாத்தான் வேதம் ஓதுவது போன்று — முத்திரை மந்திரி செல்லையா சிறையில்வாடும் தமிழ் இளைஞர்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்.**

அவரது பிதற்றல் 4-1-77ல் வெளிவந்த அரசாங்க 'கஜெட்' ஆன தினகரன் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது! பளையில் மக்கள் வங்கிக் கிளையொன்றின் திறப்பு விழாவில் குமாரசூரியர் போதை தலைக்கேற புலம்பியிருக்கிறார்!

கொஞ்சக்காலமாக குமாரசூரியர் பட்டுவரும் அவதி நமக்குத் தெரியும்!

சங்கக் கடையில் வேலை கொடுத்தாலும், சப்போஸ்ட் ஆபீசுகளை திறந்து வைத்தாலும், சலுகைகள் பல செய்தாலும்—தன்மானத்தமிழர்கள் ஒருபோதுமே தனக்கு வாக்களிக்கப்போவதில்லையென்பது குமாரசூரியருக்கு தெளிவாகப் புரிந்து விட்டது!

தேர்தலில் குமாரசூரியர் எங்கு போட்டியிட்டாலும்—எப்படித்தான் தலைகீழாக நின்றாலும்—தமிழினம் அவரது நெற்றியில் நிச்சயமாகப் பட்டைநாமம் போடப்போவது அவருக்கே உறுதியாகத் தெரியவாரம்பித்துவிட்டது!

பாலங்கள், பள்ளிக்கூடங்கள். மதகுகள், பலநோக்கக் கூட்டுறவுச்சங்க வேலைகள்—இவைகள் எல்லாவற்றையும் விட தமிழன் தனது சுதந்திரத்தையே பெரிதாக நேசிக்கிறான்; அச்சுதந்திரத்துக்காகப் போராடிவரும் தமிழினத்தின் ஒரேயமைப்பான தமிழர் விடுதலைக்கூட்டணியிலேயே அவன் சங்கமமாகியிருக்கிறான் என்கிற உண்மைகள் குமாரசூரியருக்கு தெரிகிறது.

உண்மையைத் தரிசிக்கிறார்! ஆனால் அது அவருக்கு வேம்பாகக் கசக்கிறது! தனது எண்ணம் நிறைவேறப்போவதில்லையென எண்ணும்போது குமாரசூரியருக்கு ஏக்கம் பிறக்கிறது! உள்ளத்தில் அரிப்பு ஏற்படுகிறது!

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டவுடன்—பொதுத்தேர்தல் நடந்தவுடன்—தனது ஆள் அம்பு, அதிகாரத்திமிர் அத்தனையும் இருந்த இடமே தெரியாமல் அழிந்துவிடப்போகிறதேயென்பதை எண்ணும்போது குமாரசூரியருக்கு நெஞ்சை என்னவோ செய்கிறது!

அதனால்தான் அவதிப்படுகிறார்! அரற்றுகிறார்! வாயில் வந்தபடி பிதற்றுகிறார்!! இது நமக்குத் தெரியும்:

தனிநாடு கோரிச் சிறையில் தவிக்கும் தமிழ் இளைஞர்களின் நிலையென்ன? என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார் குமாரசூரியர்!

தமிழ் இளைஞர்களை எதுவித நீதி விசாரணையுமின்றி 1972ம் ஆண்டுமுதல், சிறைக்குள் தள்ளிப் பூட்டிவைத்திருப்பது யார்? குமாரசூரியரும் அங்கம் வகிக்கும் அரசாங்கம்தானே!

அவர்களை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்துங்கள்; அல்லது விடுதலை செய்யுங்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும், இந்நாட்டின் வேறு பல அரசியல் கட்சிகளும், அரசியல் சாராத பிரமுகர்களும், சர்வதேச மன்னிப்புச் சபையும் திருப்பித் திருப்பிக் கோரிக்கை விடுத்தும்; அவற்றை சிறிதுகூட காதில் வாங்கிக் கொள்ளாமல், தமிழ் இளைஞர்களை ஆண்டுக்கணக்காக சிறைக்குள் அடைத்து வைத்து, சித்திரவதை செய்து அவர்களது வாழ்வை அணு அணுவாகச் சூறையாடிவரும்பயங்கரக் கொலைகாரர்கள் யார்?

குமாரசூரியரின் இனவெறி அரசாங்கம் தானே!

"குமாரசூரியரையும் கொல்லச் சதிசெய்தார்கள்" என்ற—இதுவரை நீதிமன்றமெதிலும் நிரூபிக்கப்படாத—ஆதாரமற்ற அபாண்டமான குற்றச்சாட்டின் பேரிலும் தமிழ் இளைஞர்களை சிறைக்குள் அடைத்துவைத்திருப்பது குமாரசூரியர் கும்பிடும் அம்மாவின் அரசாங்கம் தானே?

தங்கள் வாழ்வையே முழுமையாக அர்ப்பணித்து—தமிழ் ஈழத்தின் புனிதமான சுதந்திரத்துக்காக போராடி இன்று சிறைக்கோட்டங்களுக்குள்ளும் சிங்கங்களாக உறுமியபடி இருக்கும்செந்தமிழ்க் காளையரைப்பற்றி உச்சரிக்க குமாரசூரியருக்கு என்ன யோக்கியதையுண்டு?

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் முதலாளித்துவ யூ. என். பியுடன் இரகசியப் பேச்சு வார்த்தை நடத்துவதாகவும், இதனால் தமிழ் இளைஞர்களுக்கும் கூட்டணித்தலைவர்களுக்குமிடையே விரைவில்போர் மூளப்போவதாகவும் சிண்டு முடிய முனைந்திருக்கிறார் குமாரசூரியர்!

போயும் போயும் குமாரசூரியரின் வலைக்குள் சிக்கக்கூடிய அளவுக்கு தமிழ் இளைஞர்கள் அவ்வளவு தூரம் சிந்திக்கத்தெரியாத மூடர்கள் அல்லவே!

குமாரசூரியர் அரசியலுக்குள் நுழைவதற்கு முன்பிருந்தே ஐ. தே. கட்சியை கடுமையாக எதிர்த்துப் போராடி வந்தவர்களே இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியில்பெரும்பான்மையோராக அங்கம் வகிக்கிறார்கள் என்பது வரலாறு உணர்ந்தவர்களுக்குத் தெரியும்! குமாரசூரியருக்கு எங்கே இந்த வரலாறுதெரியப்போகிறது?

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 27 ஆண்டுகால வரலாற்றில் ஆக நான்கே நான்கு ஆண்டுகள் மட்டுமே யூ. என். பி.க்கு ஒத்துழைப்பு நல்கியது—அதுவும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் — என்ற வரலாற்றுண்மை குமாரசூரியருக்கு எங்கே தெரியப்போகிறது?

குமாரசூரியர் சார்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் — தேவநாயகம் சார்ந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியும்—ஆக இரண்டுமே தமிழ் சமுதாயத்தின் பரமவிரோதிகள்; இந்த இரண்டு கட்சிகளில் எது ஆட்சிக்கு வந்தாலும் தமிழினத்துக்கு பயன் ஏதுமில்லை — சிங்கள சிறிலங்காவிலிருந்து பூரணமாக விடுபட்டு, தமிழ் தேசிய இனம், தமிழ் ஈழத்தில் தன்னைத்தானே ஆளவேண்டும் என்ற மகோன்னதமான குறிக்கோளுடன் இயங்கிவருகிறது தமிழர் விடுதலைக் கூட்டணி! இந்த சுதந்திர இயக்கத்துக்கு 'முதலாளித்துவ' முலாம் பூச முற்படுகிறார் குமாரசூரியர்!

குமாரசூரியர் அவர்களே! முதலாளித்துவத்துக்கு யார் துணைபோகிறார்கள்? யார் முண்டுகொடுக்கிறார்கள்? 'தாசா' முதலாளியை தட்டிக்கொடுத்து வளர்த்துவருவது உமது 'சோசலிச' அரசாங்கமா? அல்லது தமிழர் விடுதலைக்கூட்டணியா?

நாட்டில் நடப்பது தனிச் சிங்கள ஏகாதிபத்தியம் என்றோம்; எம்மை இனவெறியர்கள் என்றார் குமாரசூரியர்; இப்போது அவரே தனது திருவாய்திறந்து 'சிறிலங்கா சுதந்திரக்கட்சியொன்றே தனியாக ஏகபோக சிங்கள மக்களின் ஆட்சிப் பலம் பெற்று அதிகாரத்தில் அமர்ந்திருப்பதாக கூறியிருக்கிறார்; அதாவது நடப்பது தனிச்சிங்கள ஏகாதிபத்தியம்தான் என்று கூறிவிட்டார்! அதற்கு எமது நன்றி!

**அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென உடுவில் பிரதிநிதி கூறுகிறாராம்—எங்கே கூறினார் உடுவில் பிரதிநிதி? குமாரசூரியர் ஏதாவது கனவுகண்டு பிதற்றுகிறாரா?** குமாரசூரியரின் அரசாங்கத்துக்குஇன்று தேசிய பேரவையில் சிம்ம சொப்பனமாக வன்றோ விளங்குகிறார் உடுவில் பிரதிநிதி!

இறுதியாக ஒன்று—

தமிழ் இளைஞர் பேரவையில் தானும் சேர்ந்தாலும் வியப்பில்லை என்று குமாரசூரியர் அ[illegible]டியிருக்கிறார்!

தமிழ் [illegible]ளைஞர் பேரவை விடுதலை விரும்பிகளான வீரத் தமிழ் இளைஞர்களின் விடுதலைப் பாசறை; தன்மான வீரர்களுக்கு மட்டுமேயுரிய இயக்கம்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரிக்க முடியாத ஒரு அங்கம்; தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னேடும் தீரர் கூட்டம்!

**தமிழ் இளைஞர் பேரவையில் மானம் ரோசம் அற்றவர்களுக்கு— தன்மானமிழந்தோருக்கு—சோற்றுத் துருத்திகளுக்கு-சோற்றலடித்த பிண்டங்களுக்கு — தமிழ்த் துரோகிகளுக்கு-எட்டப்பர்களுக்கு - ஈனப்பிறவிகளுக்கு இடம் இருக்குமென்று நாம் கருதவில்லை!**

குமார்சூரியர் அவர்களே! தமிழர் விடுதலைக்கூட்டணியோ, தமிழ் இளைஞர் பேரவையோ எதைச்செய்ய வேண்டும்; எதைச்செய்யக் கூடாது என்று அபிப்பிராயம் சொல்வதற்கு நீர் யார்? உமக்கு அதற்கு என்ன அருகதை இருக்கிறது?

தமிழர் விடுதலைக்கூட்டணி யூ. என். பி. யுடன் இரகசியம் பேசவுமில்லை; அல்லது, தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு வேட்டு வைத்து; 1974 சனவரி 10ம் நாள் உலகத் தமிழ் மாநாட்டில் பத்துத் தமிழர்கள் படுகொலைக்காளாகுவதற்கு காரணமாக விருந்ததுடன், அதுபற்றி நீதிவிசாரணை நடத்தவும் மறுத்து; புத்தளத்தில் கொலைக்களக்காதை பாடி; தமிழ் இளைஞர்களை சிறையில் தள்ளி அவர்களின் வாழ்வை அழித்து; புதிய அரசியல் சட்டத்தின்கீழ் தமிழினத்தை ஆளப்படும் அடிமை இனமாக்கி; தமிழ் பேசும் மக்களை நாய்போல் நடாத்தும், உமது சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணையப்போவதுமில்லை!

ஆனால்......

சுதந்திரத் தமிழ் ஈழத்தை மீள அமைக்கும் தனது புனித இலட்சியத்தை வென்றெடுக்க முடியுமானால், தமிழர் விடுதலைக் கூட்டணி பேயோடு சேரவும் தயாராக இருக்கிறது!

— எரியீட்டி

## நியாயமே இறங்கிவா!

படுகொலை செய்தார் எங்கள்
பைந்தமிழ்த் தோழர் தம்மை
கடுகளவேனும் நெஞ்சக்
கருணையே இல்லாச் சாதி!
கொடு அநா கையில் வாளை
கொலைஞர்கள் தலையைக் கொய்ய
கொடுமைகள் தாங்கித் தாங்கிக்
குமைந்தது போதும்! போதும்:!

சிங்களப் புலியின் கையில்
சிக்கிய மான்களானேம்
இங்கினி தமிழர்க் கெல்லாம்
இழவுதான் தொடரும் நாளும்
கொங்கையைக் கொண்டே ஊரைக்
கொழுத்தியே வீரம் சொன்ன
தங்கமே! தாயே! உந்தன்
தனயரைக் காக்க வாராய்!

மயானமே ஆகவேண்டும்
மறவர் நம் பூமி என்றே
தியானமே செய்யும் இந்தத்
தீயவர் அழியத் தானே
நியாயமே! இறங்கி வந்து
நெருப்பினைக் கொட்டுவாயே!
வியாகுலத் தமிழர் செய்யும்
விண்ணப்பம் தள்ளலாமோ?

— ஈழத்துக் கவிஞன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சுதந்திர தீபம் அணைந்த வரலாறு!

**கொழும்புதொழில் நுட்பக்கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினர் 30-10-76ல் எடுத்த முத்தமிழ் விழாவில் தளநாயகர் அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையை 7-11-76 சுதந்திரனில் படித்தேன். இந்த உரையில் தமிழர்கள் போர்த்துக்கேயருக்கெதிராக நடத்தியபோராட்டங்கள் பற்றிப் பேசுகையில் பின்வரும் விபரங்களைக் கூறியிருந்தார்கள்:-**

**"1619ம் ஆண்டு தமிழ் மன்னன் சங்கிலி மன்னன் காட்டிக்கொடுக்கப்பட்டு கோவாவுக்கு அவன் இழுத்துச்செல்லப்பட்டு அங்கு தூக்கில் தொங்கவிடப்பட்ட பின்னரும் போர்த்துக்கேயரால் தமிழினத்தை அடக்க முடியவில்லை. அதற்குப்பின்னரும் மூன்று ஆண்டுகள் கரையோரத்தில் தமிழர்களின் தலைவனாகிய வர்ணகுலத்தான் என்ற தமிழ் வீரன் போர்த்துக்கேயருக்கு சிம்ம சொப்பனமாக இருந்திருக்கிறான்."**

யாழ்ப்பாண அரசை கி.பி. 1519தொடக்கம் 1565 வரை பரிபாலித்து, இந்த அரசைக் கைப்பற்றுவதற்காக கோவாவிலிருந்து பெரும்படையுடன் வந்த மகாதேசாதிபதிகொன்ஸ்ரன்ரைன் டி பிறகன்சா (Viceroy Constantine de Braganza) என்பவனின் முயற்சிகளையெல்லாம் தோற்கடித்து வெற்றிவாகை சூடிய முதலாம் சங்கிலியிலிருந்து வேறுபடுத்துவதற்காக சங்கிலி குமாரன் என்றழைக்கப்பட்டவனே யாழ்ப்பாண அரசின் கடைசிப்பாதுகாவலனாக இருந்தான்.

## வீரத்தியாகி

இவன்தான் 1619ம் ஆண்டில் பறங்கிகளால் தோற்கடிக்கப்பட்டு இந்தியாவுக்குத்தப்பி ஓடமுயன்றபோது பருத்தித்துறைக்குமேலாகவுள்ள கடலிலே பிடிக்கப்பட்டு கோவாவுக்குகொண்டு செல்லப்பட்டு தூக்கிலிடப்பட்ட ஈடு இணையற்ற தமிழ் வீரத்தியாகி.

இவன் பறங்கிகளுக்கெதிராக நல்லூரில் நடத்திய இறுதிப்போரில் கரையாரின் சிற்றரசன் (Kinglet of the Carias) என்றும் வர்ணகுலத்தான் என்றும் சொல்லப்பட்ட ஒருவன் இருபதினாயிரம் வீரர்களைக்கொண்ட ஒரு படையுடன் இவனுக்குத்துணை நின்றானென்று குவைறோஸ் குருவானவர் என்றபோர்த்துக்கிய வரலாற்று நூலாசிரியர் கூறுகிறார். இவனை போர்த்துக்கியர்களின்பெரும் பகைவன் என்றும் அந்த நூலாசிரியர் கூறியிருக்கிறார். இந்தப்போரின் பின்தான் சங்கிலி குமரான் பிடிபட்டான்.

அதன் பின்னும் கரையாரின் சிற்றரசன் என்பவன் பல தடவைகள் தஞ்சாவூர் சென்று நாயக்க அரசனிடம் படைகளைப் பெற்று தொண்டைமானாற்றில் வந்திறங்கி ஒரு குளத்தினருகே தங்கி அதன்பின் நல்லூர், கரையூர் வரை சென்று பலபோர்களை நடத்திதோல்வியடைந்தானென்றும் குவைறோஸ் குருவானவர் கூறுகிறார்.

## 'குவைறோஸ்' கருத்து

இந்தப்போர்கள் பற்றிய விபரங்களில் தொண்டைமானாறு என்று ஓரிடத்தில் சரியாகவும் வேறு இடங்களில் தலி மன்னார் (Talimannar) என்றும், மன்னார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஒல்லாந்தருடைய சில நூல்களில் தொண்டைமானாறு என்றபெயரை தொல் மன்னார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நூல்களில் கொடுக்கப்பட்ட விபரங்களைப்பார்த்தால் இந்தப் பெயர்களெல்லாம் தொண்டைமானாற்றையே குறிக்கின்றனவென்பது தெளிவாகும் இதை அறியர்தபடியால் யாழ்ப்பாண வரலாற்று நூல்களில் சில தவறுகள் புகுந்துவிட்டன. வரலாற்று நூல்களை எழுதுபவர்கள் இதைக் கவனிப்பது நல்லது.

மேலே சொல்லப்பட்ட போராட்டங்கள் பற்றி இங்கே விபரமாய் எழுதமுடியாது. என்றாலும் தமிழ் மக்களின் சுதந்திர தீபம் எப்படி அணைந்ததென்பதைக் காட்டும் சோக வரலாற்றிலுள்ள கடைசி நிகழ்ச்சியை யாவது மூலநூல்களைப்படிக்க வசதியில்லாத தமிழ் மக்களும் அறிந்திருப்பது நல்லதென்ற எண்ணத்தினாலுந்தப்பட்டே அவர்கள் நடத்திய இறுதிப் போரைப்பற்றிய சில பிரதான விபரங்களை குவைறோஸ் குருவானவரின் நூலிலிருந்து மொழிபெயர்த்து சுதந்திரன் மூலம் கொடுக்கலாமென்றெண்ணுகிறேன். மொழிபெயர்ப்பை நன்றாய் விளங்கிக்கொள்வதற்கு வேண்டிய சில விபரங்களை முன்பே கொடுப்பது நல்லதென்றெண்ணுகிறேன்.

சங்கிலிகுமாரனை வென்று அவனைச்சிறைப்பிடித்த போர்த்துக்கிய தளபதியின் பெயர் பிலிப் ஒலிவேரு (Philip de Olivera) இந்த வெற்றியின் பின்னர் யாழ்ப்பாண அரசை நடத்தும்படி இவனே கொழும்பிலும் போர்த்துக்கிய தேசாதிபதியாய் நியமிக்கப்பட்டான். இவன் சில காலம் நல்லூரிலிருந்தும் பின்னர் பறங்கித் தெருவிலிருந்தும் அரசை நடத்திவந்தான். இவனுக்கு உதவியாக இவனுடைய மருமகனான அந்தோனியோ — டா—மோத்தா கலுவாவோ என்பவன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தான். இப்போ மொழிபெயர்ப்பைப் படியுங்கள்:—

## மொழி பெயர்ப்பு இதோ

"இந்த இராச்சியத்தை (யாழ்ப்பாணம்) வென்றெடுப்பதற்கும் புதிதாய் மக்களைக் குடியேற்றுவதற்கும் ஒரு பெரும் படை (தஞ்சாவூரிலிருந்து) வருவதாக நாகபட்டணத்திலிருந்து மறுபடியும் செய்திகள்கிடைத்தன. இந்தப் படையை எதிர்பார்த்து அந்தோனியோ - டா - மோத்தா என்ற தளபதி பருத்தித்துறையில் (Ponta das Pedros) காத்திருந்தான். ஆனால் அந்தப்படை பருத்தித்துறையிலிருந்து வெகுதூரத்தில் இறங்கி ஒரு புறத்தினருகே ஒரு பனங்கூடலுக்குப் பின் கூடாரமடித்திருந்தது. அந்தப்படை இளைப்பாறுவதற்கு அவகாசம் கொடுக்கப்படாதென்று ஒலிவேரு தன்னுடைய மருமகனுக்கு அறிவித்தான். பின்னவன் ஒற்றர்கள்மூலம் விஷயங்களை அறிந்துகொண்டு இரகசியமாக இரவோடிரவாகத் தன் படையை நடத்தினான் அப்போ ஒரு பீரங்கி வெடிச் சத்தம் கேட்டது.

தங்களுடைய படையின் வரவை எதிரிகள் அறிந்துகொண்டார்களோவென்றெண்ணிச் சிலநேரம் தரித்து நின்றார்கள். வெடிச் சத்தம் தொடர்ந்து கேட்காதபடியால் மறுபடியும் படை நடக்கத்தொடங்கி [illegible] தின் பின் மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டதால் எதிரிகள் தங்கள் இராக் காவல்காரரை மாற்றுவதற்காக வெடி சுடுகிறார்களென்று முடிவுசெய்தார்கள். எதிரிகளின் படை மற்றும் எல்லாப் பக்கங்களிலும் காவல் வைத்திருந்தாலும் பனங்கூடல் பக்கம் காவல் வைத்திருக்கவில்லை.

"இந்தப் பனங்கூடலையடைந்தவுடன் எங்களுடைய படைவீரர் பலவிதமான யுத்த இசைகளுடனும் வீரர்களின் சத்தங்களுடனும் 'சந்தியாகோ' (Santiago) என்ற போர் கோஷத்தை எழுப்பினார்கள். எதிரிகளின் படையினரில் சிலர் குதிரைகள் மேலேறினாலும் அவர்களின்படை சிதறுண்டு முழுத் தோல்வியடைவதைத் தடுக்கமுடியாமல் போய்விட்டது. அந்தப்படையின் தளபதியும் யாழ்ப்பாண அரசின் தேசாதிபதியுமாய் நியமிக்கப்பட்டிருந்தவனும் முதல் கொல்லப்பட்டவர்ளிலொருவனான்''

இந்த யுத்தம் நடந்துகொண்டிருந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஒலிவேருவும் மற்றவர்களும் தங்களுடைய படையைத் தோற்கவிட வேண்டாமென்றும் தங்களுக்கு வெற்றி தரும்படியும் கடவுளுக்கும் அற்புத மாதாவுக்கும் (Lady of Miracles) முதல்நாள் சாயந்தரம் தொடங்கி மறுநாள் அதிகாலை நாலுமணிவரையும் அது யுத்தம் நடக்கும் நேரமாதலால் வணக்கஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

"அப்போ ஒரு போர்வீரன் கலுவாவோ என்ற தளபதியிடமிருந்து ஒரு செய்தியுடன் ஓடிவந்தான். மாதா தங்களுக்கு வெற்றி கொடுத்துவிட்டதாகவும் எதிரிப்படையின் தளபதி கொல்லபட்டுவிட்டதாகவும் ஐந்நூறு தலைகளைத்தாங்கள் வெட்டிவிட்டதாகவும் அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.........."

"அதிக தாமதமில்லாமல் லாமல் இன்னொரு செய்தி வந்தது. தாங்கள் எண்ணூறு தலைகளை வெட்டிவிட்டதாகவும் தலைவெட்டு நடந்துகொண்டிருப்பதாகவும் தொடர்ந்து வெட்டுவதற்குத் தங்களுக்குப் பெலமில்லையென்றும் அந்தச் செய்தி தெரிவித்தது.

"அதன்பின் மறுநாட்காலை பத்து மணியளவில் மூன்றாவது செய்திவந்தது. ஆயிரத்து இருநூறு தலைகளுக்கு மேல் வெட்டப்பட்டுவிட்டதாகவும் தாங்கள் பல வெற்றிப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாகவும் விரைவில் திரும்பி வருவதாகவும் அந்தச்செய்தி தெரிவித்தது. அப்போ பெரிய தளபதி (ஒலிவேரு) தன்னுடைய கப்பித்தான்கள், படைவீரர், முதலிமார், ஆராச்சிகள் பலரை நல்லூர் வரை சென்று வெற்றிப் படையை வரவேற்கும்படியும், அது வந்ததும், தனக்கு அறிவிக்கும்படியும் கட்டளையிட்டு அனுப்பினான். இரண்டு நாட்களின்பின் அந்தப்படை வந்துசேர்ந்தது. அவர்களை வரவேற்கும்படி (பெரிய தளபதி ஒலிவேரு) இரண்டு படை அணிகளுக்குக் கட்டளையிட்டான்.

மதகுருமாரும் பொதுமக்களும் (People) வெற்றித் தளபதியை மேல்பாவாடை (Canopy)யின் கீழ் வரவேற்றார்கள். அவனுடைய மாமன் அவனையும் கப்பித்தான்களையும் போர் வீரரையும் பாராட்டினான். அந்த நேரத்தில் ஒரு ஆராய்ச்சி நீண்ட அழகான சற்றே நரைத்த தாடியையுடைய அரை வெண்தலையான ஒரு பெரிய தலையைக் கொண்டுவந்து ஒரு சிலைத்துண்டின்மேல் பெரிய தளபதி (ஒலிவேரு)யின் முன்வைத்து இதுவே எதிரி படைத்தளபதியின் தலையென்று கூறினான்''...

சில நாட்களின் பின் 'இந்தப் போரில் தப்பி ஓடியவர்களில் சிலரும் குடியேற வந்தவர்களில் சிலரும் இலகுவில் இந்தியாவுக்குப்போவதற்காக மலியவளை Malja-valai) என்ற இடத்தில் ஓடிப்போயிருப்பதாக ஒலிவேரு கேள்விப்பட்டு அங்குசென்று அவர்களைக்கொல்லும்படி தன்னுடைய மருமகனுக்குக் கட்டளையிட்டான். அப்படியே அவன் சென்று ஐநூறுபேர் வரையில் கொன்று திரும்பினான்''

இதுவே தமிழ் மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காக நடத்திய இறுதிப்போராகும்.

தொண்டமானாறு
செ. நாகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொகுதிகளைக் காட்டும் இலங்கைப் படம் தனிச் சிங்களத்தில்

புதிய தேர்தற் தொகுதிகளைப் பிரித்துக்காட்டும் இலங்கைப்படம் ஒன்றை அரசாங்கம் தற்போது தயாரித்துவருகிறதாம். ஓர் அங்குலத்தள வரைபடமாக (One inch base map) நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் இப்படம் தனிச் சிங்களத்திலேயே இருக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. தமிழ் ஈழத் தொகுதிகளையும் உள்ளடக்கிய புதிய தேர்தற் தொகுதிகளைப் பிரித்துக்காட்டும் இவ் வரைபடம் தனிச்சிங்களத்தில் மட்டும் தயாரிக்கப்படுவதனால், தமிழ் மாணவர்களும், ஏனைய தமிழர்களும் பெரிதும் கஷ்டமுறப் போகின்றனர். தமிழிலும் இப்படம் தயாரிக்கப்பட, நில அளவைத் திணைக்களம் நடவடிக்கையெடுக்குமா?

## யாழ் வளாகத்திலும் தனிச் சிங்களம்

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தின் நிர்வாகமும் தனிச் சிங்கள மயமாகி வருகிறது. வளாகத்தில் பல படிவங்கள் தமிழில் கிடைப்பதில்லையாம். பிரயாணப்படி கோரும் படிவம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே யாழ் வளாகத்தில் வழங்கப்படுகிறது; தமிழில் இப்படிவம் கிடைக்காமல் அங்கு வேலை பார்ப்போர் கஷ்டமடைகிறார்கள்!

## சேமிப்பு வங்கி கணக்குவைக்கும் படிவம் சிங்களத்தில்!

தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்குத் திறப்பதற்கு நிரப்பிக்கொடுக்க வேண்டிய அட்டையும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் அவதிப்படுகின்றனர். மல்லிகைத்தீவில் (மல்வத்தை) இத்தகைய சிங்களப் படிவம் கிடைப்பதனால் அங்குள்ள தமிழர்கள் தொல்லைகளுக்கு ஆளாகி வருகிறார்கள்.

## பருத்தித்துறையிலும் சிங்களத் திணிப்பு!

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாகங்கள் யாவும் சிங்களத்திலா நடைபெறுகின்றது என்ற சந்தேகம் இப்போது மக்களிடையே பரவலாக எழுந்துள்ளது. சென்ற 20-12.76 திங்கட்கிழமை ஒருவர் காரியாலயம் சென்று வருமானவரி கட்டி இலவச அரிசி பெறுமல் இருப்பவர்கள் இலவச அரிசியையும் பெறுவதற்கு விண்ணப்பஞ் செய்வதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தை காரியாலய உத்தியோகத்தரிடம் கேட்டாராம்—

அவர் தனிச்சிங்களத்தில் உள்ள பத்திரத்தைக் கொடுத்தாராம் பத்திரம் வாங்கச் சென்றவர் தமிழ் படிவம் தரும்படி கேட்ட போது— தமிழிலும் இல்லை, ஆங்கிலத்திலும் இல்லை — சிங்களத்தில் மட்டும்தான் உண்டு—யாராவது சிங்களம் தெரிந்தவர்களைக்கொண்டு நிரப்பி வாருங்கள்'' -என்று பதில் கொடுத்தாராம்.

**மில்க்வைற் அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்**

நாங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வித்தரம் உயரவேண்டும் என்று கருதி இலவசமாகக்கொடுத்து வரும் அரிவரி மட்டை, வாய்ப்பாடு மட்டை, இலவச வெளியீடுகள் என வெளிவந்தவைகளுக்கு நீங்கள் எவரிடமும் பணம்கொடுத்து வாங்கவேண்டாம். என்றுகேட்டுக்கொள்ளுகிறோம்.

உரிமையாளர்,
**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**

**செல்லமகால்** 7-ம் திகதி முதல்
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
— நடித்த —
**அல்லி**

**றெக்ஸி** 7-ம் திகதி முதல்
வெள்ளவத்தை
நாகேஷ்
சௌகார்ஜானகி
—நடித்த—
**நீர்க்குமிழி**

**றீகல்**
மட்டக்களப்பு
முத்துராமன் சரோஜாதேவி
-நடித்த
**பத்து மாத பந்தம்**

**கெயிட்டி**
4-வது வாரம்
ஜெய்சங்கர், லக்ஷ்மி
முத்துராமன், ராஸ்தா,
சுருளிராஜன், ஐ, எஸ். ஆர்.
நடித்த-
**கனிமுத்து பாப்பா**

5-வது வாரம்
**கெப்பிட்டல்-கிங்ஸ்லி**
எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா,
[இரு வேடங்களில்]
சந்திரகலா நடித்த-
**உலகம் சுற்றும் வாலிபன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**விஜயா-லிடோ**
(மட்டுநகர்) (யாழ்நகர்)
17வது வாரம்
சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன், முத்துராமன்,
**அவன்தான் மனிதன்**
(கலர்)

**பிளாசா**
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த-
**ஊட்டிவரை உறவு**
14ம் திகதி முதல் கே. பாலச்சந்தரின்
**அபூர்வ ராகங்கள்**

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
6-வது வாரம்
சிவாஜி, மஞ்சுளா நடித்த-
**மன்னவன் வந்தானடி** கலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜனவரி மாதம் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.